# பிரதான தகவல் கூற்று மற்றும் சேவை பிரசுரம்

| கணக்கின் பெயர் | இஸ்லாமிய வங்கிச் சேவை - MCB Smart Flex Platinum நடைமுறைக் கணக்கு |
|---|---|
| விபரம் | எம்சீபி ஸ்மார்ட் ∴ப்ளெக்ஸ் பிளட்டினம் நடைமுறைக் கணக்கு, சிறந்த வங்கிச் சேவைகளுடன் உங்களுக்கு பிரத்தியேக நன்மைகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் தனிப்பட்ட மற்றும் வணிக பரிவர்த்தனைத் தேவைகளைக் கையாள, பிரத்தியேக தொடர்பு முகாமையாளரின் நிபுணத்துவத்துடன் உங்கள் நிதியை அதிகரிக்க, ஏராளமான இலவச வங்கிச் சேவைகள் வழங்கப்படுகின்றன. |
| நாணயம் | இலங்கை ரூபா. |
| முக்கிய விடயங்கள் | ஆரம்ப வைப்பு: 100,000/- |
| | பராமரிக்க வேண்டிய மாதாந்த குறைந்தபட்ச சராசரி மீதி : 2,500,000/- |
| குறைந்தபட்ச வைப்புத் தொகை | பொருத்தமற்றது |
| கணக்கைப் பேணுவதற்கான கட்டணம் | பொருத்தமற்றது |
| கணக்கினை மூடுவதற்கான கட்டணம் | பொருத்தமற்றது. |
| நன்மைகள்/ பெறுமதி சேர் சேவைகள் | **<u>இலவசமாக பல்வேறு சேவைகள் வழங்கப்படும்</u>**<br>தனித்துவமான காசோலை புத்தகம் (மாதத்திற்கு 100 தாள்கள் வரை) - இலவசம்.<br>கொடுப்பனவுக் கட்டளைகள் (மாதத்திற்கு 20 வரை) - இலவசம்<br>ATM/ பற்று அட்டை (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு) - இலவசம்<br>எந்த காலவரையறைகளுக்கும் இலத்திரனியல் கூற்றுகள் (பதிவு அவசியம்) - இலவசம்<br>பரிவர்த்தனைகள் தொடர்பான குறுஞ்செய்திகள் (தானியங்கி சேவை) - இலவசம்<br>மொபைல் வங்கி செயலி (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு) - இலவசம்<br>இணைய வங்கிச் சேவை (வியாபார/ நிறுவன வாடிக்கையாளர்களுக்கு) - இலவசம்<br>மொபைல் செயலி மற்றும் இணைய வங்கிச் சேவை மூலம் CEFT பரிமாற்றங்கள் - இலவசம்<br>ஊழியர் சம்பள பரிமாற்ற வசதி (வியாபார/ நிறுவன வாடிக்கையாளர்களுக்கு) - இலவசம்<br>பிந்தைய திகதியிடப்பட்ட காசோலை சேகரிப்பு சேவை - இலவசம்<br>பிற வங்கி காசோலை திரும்பப் பெறுதல் எம்சீபி ஸ்மார்ட் /ப்ளெக்ஸ் பிளாட்டினம் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டது) - இலவசம்<br>பாதுகாப்பு பெட்டக வைப்பு - இலவசம்<br><br>மொபைல் செயலி மற்றும் இணைய வங்கிச் சேவை மூலம் தினசரி நிதி பரிமாற்ற எல்லைகளை வரையறுக்கலாம்.<br><br>கணக்கிற்கு அர்ப்பணிப்புடன் கூடிய பிரத்தியேக தொடர்பு முகாமையார் நியமிக்கப்படுவார்<br><br>பணம் திரும்பப் பெறும் எண்ணிக்கையில் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. |
| கட்டணங்கள் மற்றும் அற | தற்போதைய சேவைகள் மற்றும் பிற பெறுமதி சேர் சேவைகள் தொடர்பான கட்டணங்களுக்கு www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் (வங்கி கட்டணங்களின் அட்டவணை) |
| தகைமைகள் | தனிநபர் - இலங்கையில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் (தனிநபர்/ கூட்டு) |
| | நிறுவனங்கள் - அந்தந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் |
| அவசியமான ஆவணங்கள் | சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கைத் திறப்பதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தொடர்புடைய படிவங்கள் |
| தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு | செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கடவுச்சீட்டு (கணக்குகளைத் திறக்க/செயல்படுத்தத் தகுதியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் செல்லுபடியாகும் விசாவை வழங்க வேண்டும்) |
| | முகவரிச் சான்று (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) |
| | வருமானச் சான்று |
| நிறுவன வாடிக்கையாளர்களுக்கு | வியாபாரப் பதிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/ படிவங்கள் |
| | பணிப்பாளர்கள்/ பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள் |
| | வங்கிக்கு, தனிநபர் அல்லது நிறுவனத்தின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் (தேவைப்பட்டால்) |
| கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை | கணக்கைத் திறக்க மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகளைப் பெறுவதற்கு தயவுசெய்து அருகிலுள்ள எம்சீபி வங்கிக் கிளைக்குச் சென்று முழுமையான ஆவணங்களை ஒப்படைக்கவும் |
| ஏனைய தொழிற்பாட்டு தகவல்கள் / நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | எந்தவொரு எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் வைப்புகள்/ மீளப் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது. |
| | முந்தைய மாதத்தில்/ மாதங்களில் தேவையான குறைந்தபட்ச சராசரி மீதியைப் பராமரித்த கணக்குகளுக்கு இலவச சேவைகள் கிடைக்கும்.<br><br>குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலவச சேவைகளும் குறிப்பிட்ட மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும், மேலும் அடுத்தடுத்த மாதங்களில் அவற்றைச் சேகரித்து பயன்படுத்த முடியாது.<br>3 மாதங்களுக்கு அல்லது வேறு எந்த இடைவெளியிலும் (இது அவ்வப்போது மாறக்கூடும்) தேவையான குறைந்தபட்ச சராசரி மீதியை தொடர்ச்சியாக பராமரிக்காவிட்டால், கணக்கை வழக்கமான நடைமுறைக் கணக்கிற்கு மாற்ற வங்கிக்கு உரிமை உண்டு. |
| | பாதுகாப்பு பெட்டக வசதி கிகைக்கக்கூடியதாக இருந்தால் வழங்கப்படும் மற்றும் அதற்கு ரூபா 25,000.00 வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். (இந்த வசதிக்கு வருடாந்தக் கட்டணம் அறவிடப்படமாட்டாது) |
| | திருப்திகரமான அளவில் பராமரிக்கப்படாத அல்லது சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு கணக்கையும் நிறுத்திவைத்திருக்க/ மூட வங்கிக்கு உரிமை உண்டு. |
| | எந்த வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளும் இல்லாது 12 மாதங்களுக்கும்* மேலாக செயல்படாமல் இருக்கும் கணக்குகள் உறங்கல் கணக்குகளாக வகைப்படுத்தப்படும். (காலம் அவ்வப்போது மாறுபடலாம்) |
| | 10 ஆண்டுகள் செயலற்ற நிலையில் இருக்கும் கணக்குகள் கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டுதல்களின்படி கையாளப்படும். |
| | இலங்கை மத்திய வங்கியின் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்க வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. |
| | இணக்கத்திற்காக/ தவறுகைகளை மீளத் திருப்பலுக்காக/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்காக ஏதேனும் தவறான/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எழுத்துப்பூர்வமாக கிளைக்குத் தெரிவிக்க வேண்டும். |
| | வங்கியின் உள் கொள்கைகள்/செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாறக்கூடும், மேலும் அவை வங்கியின் இணையதளம்/கிளை அறிவித்தல் பலகைகளில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஊடகம் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும். |
| <u>மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள்</u> | எம்சீபி வங்கிக் கிளைகளுக்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள்/ விஜயம் செய்யுங்கள்\|இணையத்தளம்: www.mcb.com.lk ஹொட்லைன்: 011 5222 200 \| மின்னஞ்சல்: info@mcb.com.lk |
| <u>முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை</u> | எந்த எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் புகார்களை அனுப்பலாம் (பிரத்தியோக புகார் பெட்டி உள்ளது) |
| | பிரத்தியோக நேரடி தொடர்பு மையம் :<br>திணைக்களத் தலைவர் - இணக்கம், எம்சீபி வங்கி லிமிடட், 08, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 01.<br>தொலைபேசி : 011 5222 230 \| மின்னஞ்சல்: complaints@mcb.com.lk |
| | தீர்மானம் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டால்/ 04 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் புகாரை பின்வருமாறு விரைவுபடுத்தலாம்:<br>நிதி ஓம்புட்ஸ்மேன், இல.01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு - 05<br>தொலைபேசி: 011 2595 624 \|மின்னஞ்சல் : fosril@sltnet.lk \|இணையத்தளம்: www.financialombudsman.lk |

**எம்சீபி வங்கி லிமிடட் என்பது இலங்கை மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.**
**கடன் மதிப்பீடு: "AA- (lka)" | Outlook Stable (Fitch Ratings)**